# கைலாயம் போகலாம், வாங்க!

2016 பொங்கல் அன்று இது ஆரம்பித்தது! கைலாயம் போகலாம் என்று இருக்கிறேன் என்றவுடன், அறிவுரைகள் பொங்கின!. உனக்கு வயாதாகிவிட்டது, சுகர் உள்ளது, ரொம்ப செலவாகும், இதயம் தாங்காது!! நம்மிடம் ஒரு போட்டி குணமும், மற்றவர் சொல் பொய் என நிருப்பிக்கும் பிடிவாதமும் உள்ளது இல்லையா?

இந்த கட்டுரை என்ன கொண்டு போகவேண்டும் எப்படி போகவேண்டும் என்பதல்ல. உங்களுக்குள் ஒரு தூண்டுதலை உருவாக்குதல் என் நோக்கம். கைலாயம் பற்றி உங்கள் இருக்கையில் இருந்து யூ-ட்யூப்இல் பல வீடியோ பார்க்கலாம் உங்கள் காலனி இல்லாமல்! ஆனால் சிலர் அந்த 'அனுபவத்தை' தேடி செல்கின்றனர். நீங்கள் மனது வைத்தால் எல்லா தடையும் நீங்கி கைலாயம் செல்லலாம்.

பரந்த கைலாயம் மற்றும் மாணசரோவர் எண்ணற்ற அதிசயங்களும் அபரித உணர்ச்சிகளை உள் கொண்டுள்ள இடமாகும். In short, feeling blissful! உங்கள் முயற்சி மட்டுமே உங்களுக்கு தேவையானதை கொடுக்கும்

இதோ முக்கியமான இடங்கள்:

பொடலா அரண்மனை(Potala Palace)

ல்ஹஸா ஸீடியில் (Lhasa City) உள்ள இந்த இடம் இந்தியன்பாஸ்போர்ட் இல்லாதவர் மட்டுமே அனுமதி. இந்த இடத்தில் பல தலைமுறை லாமா தலைவர்கள் (Dalai Lama) வாழ்ந்த பூமி. அவர்கள் சிலை மற்றும் உபயோகித்த பொருட்கள் பல அருங்காட்சியாக உள்ளது. நெய் தீபங்கள் மற்றும் வண்ண பூக்கள் இந்த இடத்தை அமைதி ஆக்குகின்றன.

தீபெத்(tibet) உள்ள மக்கள் கோவில் சுற்றும் போது கையில் அழகாக சுற்றும் மணி நல்ல அனுபவம். நம்ம கோவில் போல சிலர் உருண்டு நெற்றிககடன்செய்கின்றனர். திருமணம் ஆன பெண்கள் வித்தியாசமான உடை (apron) அணிகின்றனர்.

மாணசரோவர் ஏரி

ஆள் ஆர்வாட்டம் இன்றி அமைதியாய் இருக்கும் பல பிரபந்த (cosmic) எழுச்சிக்கலை உள் அடக்கிய இடம். சில சமயங்களில் ஆதி காலையில் வானில் இருந்து ஒளி இதர்க்குள் பாயும். எல்லோர் மனத்தையும் அமைதி ஆக்கும் இடம். நீங்க இரவு பொழுதை அருகில் உள்ள விடுதியில் (camp) கழிக்கலாம். ஆனால் முழு நேர தண்ணீர் அல்லது கரெண்ட் (electricity) கிடையாது! அதனால் உங்கள் நாள் மின்னஞ்சல் அல்லது FB அப்டேட் இன்றி நல்லாகவே போகும். ஹிந்து மக்கள் இங்கு புனித நீராடல் செய்கின்றனர் ஆனால் இங்குள்ள தண்ணீரைய் எடுத்து செல்வதில்லை. இதன் அருகில் ராவணன் ஏறி உள்ளது ராமாயணம் தெரிந்தவர்களுக்கு புரியும். இதன் பக்கத்தில் புத்த தேவாலயங்கள் (Budda Monestry) உள்ளன

கைலாயம்

13km நடை பயணம் மலை மேலே அதுவும் ஆக்ஸிஜந் ரொம்ப கம்மி, இதுவே எல்லாருக்கும் பெரிய சவால். சிலர் லகேஜ் தூக்க உதவியும் (porter) சிலர் 'pony' என்ற கழுதையும் வைத்து கொள்ளலாம். வழி நெடுக உயரமான மலைகள், அருவிகள் என வித்தியாசமான பயணம். இது ஒரு முழு பிரதக்ஷிணம் அல்ல. தெற்கு முதல் வடக்கு வரை பகுதி மட்டுமே. உதவிக்கு வரும் தீபேதியன் மக்கள் லவுவாக ஓடுவதும், மூட்டை சுமப்பது பார்க்க அதிசயமாக உள்ளது. மூச்சு பயிற்சி மற்றும் ஆக்ஸிஜந் குழாய் (oxygen can) நடை பயணத்தை சுலபமாக ஆக்குகிறது. கைலாயம் 16000 அடி உயரத்தில் உள்ளது.

கைலாயம் மலை பனி மூடின கருங்கற்கள் ஆன புராண மகத்துவம் மிக்க பூமி. சிவ பெருமான் தவம் புரிந்த இடமாக கருதப்படுகிறது. சிலர் இதன் அடியில் மகத்தான சக்திகள் உள்ளதாக நம்பு கின்றனர். மனத்தினில் சஞ்சலம் அடங்கி அமைதி யாவது உண்மை! என்னிடம் பலர் அங்கு என்ன கோவில் உள்ளது, என்ன விக்கிரகம் உள்ளது என கேட்கின்றனர். அங்கு எதுவும் இல்லை!. இங்கு இருந்து கற்கள் மற்றும் நீரை சிலர் எடுத்து செல்கின்றனர்.

இந்த பயணம் உடலுக்கு எழுச்சியும் மனத்திற்கு உத்வேகமும் கொடுப்பது நிச்சயம்!



இந்த பயணம் ISHA FOUNDATION (www.sacredwalks.com) மூலமாக நிறைவேறியது

சின்மயா மிஷன் மற்றும் பல நிறுவனங்கள் மூலமும் ஹிமலாய் செல்லலாம்.

(Author: mathur ravikumar, +1-4084752424, mattravikumar@gmail.com)

Manasarovar lake



Majestic view of Mount Kailash